பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 13 செவ்வாய்க்கிழமை 27.05.2025 கதிர் 199

### இனி இது ரகசியம் அல்ல!

பனை அபிவிருத்துச் சபையின் பணிப்பாளர் சபையிலிருந்து யாழ்ப் பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் ஐங்கரன் இன்று பதவி விலகுகிறார் என்று தெரியவந்தது. ☞ 2

# மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசுக்கு ஒரு வார காலக் கெடு

## தீர்வு கிட்டாவிட்டால் போராட்டம் என அறிவிப்பு

மருத்துவர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறைக் காலக் கொடுப்பனவுகளைக்குறைத்ததுதொடர்பான திருத்தப்பட்ட சுற்றறிக்கையை ஒரு வாரத்திற்குள் வெளியிட வேண்டும் என்று ஆளும்தரப்புக்குக்காலக்கெடுவிதித்துள்ளது அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம். , தமது கோரிக்கை கவனிக்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் குதிப்போம் என்றும் எச்சரித்துள்ளது.

சங்கத்தின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டதாக அரசு மருத்துவ அதிகாரிகள்சங்கத்தின்செய்தித்தொடர்பாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

தமது முன்னைய தொழிற்சங்க நடவடிக் கையைத் தொடர்ந்து, கொடுப்பனவுகளை அவற்றின்முந்தையமதிப்புகளுக்குமீண்டும் வழங்கஜனாதிபதிஒப்புக்கொண்டார்எனவும், பின்னர்வரவுசெலவுத்ஆவணத்தில்திருத்தம் செய்யப்பட்டதாகவும், அதன்படி, பொது நிர்வாக அமைச்சகம் மார்ச் 25 அன்று ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டதாகவும் அவர் கூறினார்.

அந்த வழிகாட்டுதல்களின் ☞ 8

## இராணுவ பிரிகேடியர் கைது

கொழும்பில் உள்ள எஸ்.எஸ்.சி. மைதானத்தில் சீருடையில் இரண்டு பாதுகாப்பு காவலர்களைத் தாக்கிய சம்பவத்தில் தொடர்புடைய இராணுவ பிரிகேடியர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று குருந்துவத்த பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்திற்குரிய பிரிகேடியர் ஒரு சட்டத்தரணி மூலம் சரணடைந்த ☞ 2

## ஜூன் 3 முதல் 4 நாள் நாடாளுமன்றம் கூடும்

நாடாளுமன்றம் எதிர்வரும் ஜூன் 3 முதல் 6 வரை கூடவிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில்கடந்தவாரம்கூடியநாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அதற்கமைய, ஜூன் 3 முதல் 6 வரை காலை 9.30 மணி முதல் 10மணி வரை நிலையியற்கட்டளை22இல்குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற ☞ 2

# தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பவே ஆளும்தரப்பு முன்னுரிமையளிப்பாம்

மக்களிடையே நீண்டகாலமாக நிலவும் பிளவுகள் நீண்டகால மோதல்களுக்கு வழிவகுத்துள்ளன என்பதை நியூஸிலாந்து பிரதிப் பிரதமரிடம் சுட்டிக்காட்டிய அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை விளக்கியதுடன், நல்லிணக்கச்செயல்பாட்டின் முக்கிய தூணாக தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கு தனது ஆளும்தரப்பு முன்னுரிமை அளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து பிரதிப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான வின்சென்ட் பீட்டர்ஸுக்கும் அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுபிற்பகல் அரசுத் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

கடந்த அரசுத் தலைவர் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் பெற்ற குறிப்பிடத்தக்க வெற்றிகளுக்காக அரசுத் தலைவர் அநுர குமார திசாநாயக்க மற்றும் புதிய ஆளும்தரப்புக்கு நியூசிலாந்து ஆளும்தரப்பு மற்றும் மக்களின் வாழ்த்துகளைத் தெரிவித்த பிரதிப் பிரதமர், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை வலுப்படுத்துவதே தனது ஆளும்தரப்பின் நோக்கம் என்றும் தெரிவித்தார்.

புதிய ஆளும்தரப்பின் கீழ் இலங்கையில் நடைபெற்று வரும் சாதகமான முன்னேற்றங்கள் குறித்து மகிழ்ச்சியைத் வெளிப்படுத்திய நியூசிலாந்து பிரதிப் பிரதமர், அரசியல் உறுதிப்பாடு, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் சமூக மேம்பாட்டுக்கான புதிய ஆளும்தரப்பின் முயற்சிகளைப் பாராட்டினார்.

நாட்டை சரியான பாதையில் கொண்டுசெல்வதில் அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமைத்துவத்தை பாராட்டிய பிரதிப் பிரதமர், இந்த வேலைத்திட்டம் இலங்கைக்கு நிலையான அபிவிருத்தியை அடைய உதவும் என்றும் ☞ 2

## விளையாட்டு அமைச்சின் சாரதி ஒருவர் நேற்றுக் கைது

விளையாட்டு அமைச்சகத்திற்குச் சொந்தமான சொகுசு வாகனத்தை உரிய அனுமதியின்றி தனிப்பட்ட பயன்பாட்டிற்கு எடுத்துச் சென்றார் என்று கூறப்படும் சாரதி ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று கறுவாத்தோட்டம் போலீசார் தெரிவித்தனர்.

விளையாட்டுஅமைச்சின்போக்குவரத்துப் பிரிவிலிருந்து பெறப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். காவல்துறையினர் நடத்திய ஆரம்ப விசாரணையில், சந்தேகநபர் முந்தைய வெசாக் போயா தினத்தன்று விளையாட்டு அமைச்சகத்திற்கு வந்து, சொகுசு வாகனத்தை எடுத்துச் சென்றுள்ளார். அதன் பாதுகாப்பு அதிகாரிக்கு தவறான தகவல்களை வழங்கி, உத்தியோகபூர்வ பயணத்திற்காக என்று கூறியே வாகனத்தை எடுத்துச் சென்றுள்ளார்.

எடுத்துச் செல்லப்பட்ட வாகனம் இரண்டு நாள்களின் பின்னர் இரகசியமாக மீண்டும் அமைச்சிற்குக் கொண்டு வந்து நிறுத்தப்பட்டுள்ளது. இந்த வாகனம் இது ஏதேனும்குற்றத்திற்காகப்பயன்படுத்தப்பட்டதா? அல்லது சந்தேகநபர் தனது தனிப்பட்ட உழைப்பிற்குப்பயன்படுத்திக்கொண்டாரா ☞ 2

# தொடருந்து சாரதிகள் பலர் திடீர் சுகவீன விடுமுறை

## இதனால் பயணிகள் பெரும் அவதி

தொடருந்து ஓட்டுனர்களின் திடீர் சுகயீன விடுமுறை காரணமாக நேற்று திங்கட்கிழமை பிரதான அலுவலக தொடருந்து சேவைகள் பல இரத்து செய்யப்பட்டன.

இதன்காரணமாகபயணிகள்பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டதோடு, சேவையில் ஈடுபட்டிருந்த ☞ 2

## முதலமைச்சர் வேட்பாளர் அதாஉல்லாவா? வெளிவந்த செய்திகளில் உண்மை இல்லை

### மு.கா. செயலாளர் தெளிவுபடுத்தல்

மாகாண சபைத் தேர்தலில் கிழக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக தேசிய காங்கிரஸ் தலைவரான அதாஉல்லாவை களமிறக்குவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்திருப்பதாக வெளிவந்திக்கும் செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை என்று அக்கட்சியின் செயலாளர் நாயகம் நாடாளுமன்ற உறுப்பினர் நிசாம்காரியப்பர்தெரிவித்தார். ☞ 2

# இங்கு ஆடைத் தொழிற்சாலைகளை மூடி அவற்றை இந்தியாவில் திறப்பதே திட்டம்

## ஆளும்தரப்பின் கையாலாகாத்தனமே காரணம் என்கிறார் லக்ஷ்மன் யாப்பா

வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையிலுள்ள ஆடை தொழிற்சாலைகளை மூடி, அவற்றை இந்தியாவில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடு கின்றன. அவ்வாறு இடம்பெற்றால் எதிர்காலத்தில் இலங்கையில் ஆடை தொழிற்சாலைமுற்றாகவீழ்ச்சியடையும். வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் ஆளும்தரப்பின் இயலாமையையே இவை வெளிப்படுத்துவதாக முன்னாள் அமைச்சர்லக்ஷ்மன்யாபாஅபேவர்த்தன தெரிவித்தார். ☞ 2

# விசித்திரக் கோரிக்கையுடன் பல ஆசிரியர்கள் போராட்டம்

தங்கள் குழந்தைகள் படிக்கும் அதே பள்ளியில் சேரும் தமது உரிமையைப் பறிக்கக்கூடாது என்று கோரி, ஆசிரியர்கள் குழு ஒன்று நேற்று கல்வி அமைச்சில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

கல்விஅமைச்சின்வளாகத்திற்குள் தரையில் அமர்ந்து போராட்டம் நடத்திய இந்த ஆசிரியர்கள் கல்வி அமைச்சின் செயலாளருடன் ☞ 2

# பெரும்பான்மை இன்றி சபைகளில் அநுரவால் ஆட்சியமைக்க முடியாது

## ஜூன் 2 அவருக்குப் பதில் கிடைக்கும் ஐக்கிய மக்கள் சக்தி அரசு தலைவருக்கு பதில்

அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அரசுத் தலைவர் தேர்தலில் பெரும்பான்மை இன்றியே வெற்றி பெற்றார். ☞ 8

# பொருளாதாரத்தை கட்டியெழும்பும் வேலைத்திட்டம் இல்லையேல் இந்த வருடத்திற்குள் மீண்டும் வீழ்ச்சி

## ஐ.தே.க. தவிசாளர் வஜிர எச்சரிக்கை

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் ஆளும்தரப்பின் வேலைத் திட்டங்கள் ஆரோக்கியமானதாக இல்லை. இந்நிலை தொடர்ந்தால் வருட இறுதிக்குள் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும். அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நாட்டை மீட்பதற்கு நடவடிக்கை எடுப்போமென ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன எச்சரித்தார்.

காலியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர்செய்தியாளர்களிடம்இதனைத்தெரிவித்தார். அவர் அங்கு தாடர்ந்து தெரிவித்ததாவது:

இடம்பெற்ற முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் பெறுபேறுகளை பார்க்கும்போது ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பெருந்தோட்டத்துறை அமைச்சர் சமந்த வித்தியாரத்னவால் அவமதிக்கப்பட்டதை அடுத்து நேற்று நடந்த கூட்டத்திலிருந்து அமைச்சரின் முகத்திற்கு நேராகவே "இந்தப் பதவி தேவையில்லை" என்று தூக்கி எறிந்துவிட்டு வந்துவிட்டார் பேராசிரியர் ஐங்கரன். அவர் தனது பதவி விலகல் கடிதத்தை இன்று அமைச்சருக்கு அனுப்பி வைப்பார் என்று தெரிகிறது.

பனை அபிவிருத்திச் சபையின் மேம்பாடு குறித்து அமைச்சர் நேற்று நடத்திய கூட்டத்தில், சபையின் யாப்பிற்கு முரணாக அமைச்சரும் அமைச்சு அதிகாரிகளும் செயற்படுவதைப் பேராசிரியர் சுட்டிக்காட்டியபோது, அதற்கு செவிமடுக்காத அமைச்சர் ஒரு கட்டத்தில் பேராசிரியர் என்பதற்காகத் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்காதீர்கள், நான் சொல்வதைக் கேளுங்கள் என்று உறுக்கினார். இதையடுத்தே, எனது அறிவும் ஆலோசனையும் இங்கு பயன்படாது என்றால் எதற்காக நான் இந்தச் சபையில் இருக்கவேண்டும் என்று கேட்டு பதவியைத் தூக்கி எறிந்தார் பேராசிரியர் என்று தெரிய வந்தது.

பனை அபிவிருத்திச் சபையின் தலைமையிடம் யாழ்ப்பாணத்தில் இருக்கவேண்டும் என்று அதன் யாப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போது கொழும்பிலேயே அது இருக்கின்றது. சபையின் அனைத்துப்பணிகளும் யாழ்ப்பாணத்திலேயே நடந்தாலும் அதன் தலைமை செயல் அதிகாரியும் கணக்காய்வாளரும் அவர்களுடன் மேலும் 7 பணியாளர்களும் கொழும்பிலேயே இருக்கின்றனர். இதற்கென அங்கு ஒரு அலுவலகமும் இயங்குகின்றது. பனை அபிவிருத்திச் சபையின் கொழும்புக் கிளை வருமானத்திலும் பார்க்க இந்த அலுவலகத்தினால் ஏற்படும் செலவு அதிகமாக இருக்கும் நிலையில் அந்த நட்டத்தையும் சபையே பொறுப்பேற்கவேண்டியிருக்கின்றது. எனவே யாப்புப்படி சபையின் தலைமை அலுவலகத்தை யாழ்ப்பாணத்திலேயே இயக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பேராசிரியர் ஐங்கரன் வலியுறுத்தினார். இதனாலேயே முரண்பாடு ஏற்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் பெருந்தோட்டத்துறை பிரதி அமைச்சர் மற்றும் மீன்பிடித்துறை அமைச்சர் சந்திரசேகரன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். அங்கு அமைச்சரும் அமைச்சு அதிகாரிகளும் சிங்களத்தில் மட்டுமே பேசினர். பேராசிரியர் உள்ளிட்டவர்கள் ஆங்கிலத்தில் பேசியபோதும் அதற்குச் செவிசாய்க்காத அமைச்சரும் அதிகாரிகளும் அவர்களை தமிழில் பேசும்படி கூறினர். அமைச்சர் சந்திரசேகரன் அதற்கான மொழிபெயர்ப்பை சிங்களத்தில் வழங்குவதற்கு முயற்சித்தார். அவருக்கு ஏற்கனவே தமிழே தகறாறு. அவர் சிங்களத்தில் மொழிபெயர்த்துச் சொன்னவற்றையும் அமைச்சர்களும் அதிகாரிகளும் பெரிதாகக் கவனத்தில் கொள்ளவில்லை.

இந்த நிலையிலேயே பேராசிரியரின் கருத்துக்கள் அமைச்சருக்கும் அமைச்சு அதிகாரிகளுக்கும் தன்முனைப்பை (ஈகோவை) கிளறிவிட்டன. நீங்கள் கூட்டத்தில் ஆதிக்கம் (டாமினேட்) செலுத்துகிறீர்கள் என்று ஒரு கட்டத்தில் அதிகாரி ஒருவர் பேராசிரியரைப் பார்த்துச் சீறினார். அதைத் தொடர்ந்தே அமைச்சர், பேராசிரியர் என்பதற்காகப் பேசிக் கொண்டே இருக்காமல் நான் சொல்வதைக் கேளுங்கள் என்று உறுக்கினார். இதைத் தொடர்ந்து வாக்குவாதம் முற்றியதில், அப்படியானால் நான் இங்கு இருக்கத் தேவையில்லை என்று அமைச்சரின் முகதிலடித்த மாதிரிப் பதிலளித்துவிட்டு எழுந்து வெளியே வந்துவிட்டார் பேராசிரியர் ஐங்கரன்.

விட்டது தொல்லை என்கிற அளவில் அவரது வெளியேற்றத்தை ரசித்த என்பிபியினர் அவரைத் தடுக்கவோ, அவரை மீள அழைக்கவோ எந்த முயற்சியும் செய்யவில்லை. கூட்டத்தில் இருந்து வெளியேறிய பேராசிரியர் இன்று தனது பதவி விலகல் கடிதத்தை அமைச்சருக்கு அனுப்பி வைக்கவுள்ளார். நேற்றைய சம்பவம் குறித்து அவரிடம் தொலைபேசி அழைப்பில் கேட்டபோது, "பணிப்பாளர் சபையிலிருந்து நான் விலகுவதற்கான கடிதத்தை நாளை (செவ்வாய்க்கிழமை) அனுப்பி வைக்கவுள்ளேன்" என்று மட்டும் உறுதிப்படுத்தினார் பேராசிரியர்.

என்பிபியில் மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பட்டதாரிகளாக இருக்கிறார்கள் என்று பெருமை பீற்றினார்கள். அப்படிப்பட்ட பட்டதாரிகளில் ஒருவர் பேராசிரியர் ஒருவருக்கு கொடுத்த மரியாதையை நேற்றுப் பார்க்க முடிந்துள்ளது. நேர்மை, ஊழலற்ற ஆட்சி என்பவற்றுக்கு வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்தவர்கள், யாப்புப் பிரகாரம் நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டதற்காக பேராசிரியர் ஒருவர் சபையிலிருந்து விலகிச் செல்லும் அளவிற்கு மிக மோசமாக நடந்துகொள்கிறார்கள். என்னதான் நடக்கிறது?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மருத்துவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில், சுகாதார அமைச்சகம் ஏப்ரல் 28 அன்று ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டது. இருப்பினும், அந்தச் சுற்றறிக்கையில் மேலதிக நேரக் கொடுப்பனவுகளுக்கான தவறான கணக்கீடுகள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், பல அடிப்படை மற்றும் தொழில்நுட்பக் கொள்கைகளை மீறும் வகையிலும் அது அமைந்திருக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஏப்ரல் 29 அன்று சுகாதார அமைச்சக அதிகாரிகளைச் சந்தித்து ஆட்சேபனைகளை எழுப்பியதாகவும், அந்தச் சுற்றறிக்கையை உடனடியாக வெளியிட அமைச்சகம் ஒப்புக்கொண்டதாகவும் அவர் மேலும் கூறினார். ஜனாதிபதியின் உத்தரவு மற்றும் சுகாதார அமைச்சரின் நாடாளுமன்ற உறுதிமொழிகளை செயல்படுத்தத் தவறியது குறித்து அவர் கேள்வி எழுப்பினார், நிலைமை வெளிப்புற சக்திகளால் பாதிக்கப்படலாம் என்றும், இது விசாரணைக்கு தகுதியானது என்றும் கூறினார்.

## தேசிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கை வெளியிட்டார்.

இத்தகைய பின்னணியில், எதிர்காலத்தில் இலங்கைக்கு வழங்கப்படும் நிதி உதவியை மேலும் விரிவுபடுத்த நியூசிலாந்து ஆளும்தரப்பு எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இங்கு கருத்து வெளியிட்ட அரசுத்தலைவர் அநுரகுமார திசாநாயக்க, நியூசிலாந்து பிரதிப் பிரதமர் வின்செண்ட் பீட்டர்ஸின் பயணம் இலங்கை - நியூசிலாந்து உறவுகளில் புதிய அத்தியாயாயமாக அமையும் என மகிழ்ச்சி வெளியிட்டார்.

மக்களிடையே நீண்டகாலமாக நிலவும் பிளவுகள் நீண்டகால மோதல்களுக்கு வழிவகுத்துள்ளன என்பதை சுட்டிக்காட்டிய அரசுத் தலைவர் , நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை விளக்கியதுடன், நல்லிணக்கச்செயல்பாட்டின் முக்கிய தூணாக தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கு தனது ஆளும்தரப்பு முன்னுரிமை அளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

விவசாயம், கல்வி மற்றும் சுற்றுலா ஆகிய துறைகள் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், இருநாடுகளுக்கும் பரஸ்பர ஆர்வமுள்ள இந்தத் துறைகளின் முன்னேற்றத்திற்காக நெருக்கமாக செயற்படவும் இணக்கம் தெரிவித்தனர்.

தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, அரசுத்தலைவர் யின் முதுநிலை மேலதிக செயலாளர் ரோஷன் கமகே மற்றும் நியூசிலாந்து வெளியுறவு மற்றும் வர்த்தக அமைச்சின் முதுநிலை அதிகாரிகள் குழுவும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## தொடருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடருந்துகளும் குறிப்பிட்ட சில தொடருந்து நிலையங்களில் ஒரு மணித்தியாலத்துக்கும் மேல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

காலை 6.22க்கு பொல்கஹாவலையிலிருந்து கொழும்புக்கு செல்லும் தொடருந்தும், 6.25க்கு பொல்கஹாவலையிலிருந்து கொழும்புக்கு செல்லும் தொடருந்தும், அதிகாலை 3.55க்கு கனேவத்தையிலிருந்து பாணந்துறை செல்லும் தொடருந்தும், அதிகாலை 5.20க்கு பொல்கஹாவலையிலிருந்து கொழும்புக்கு செல்லும் தொடருந்தும் மற்றும் அதிகாலை 4.40 க்கு கொழும்பு கோட்டையிலிருந்து ரம்புக்கனை செல்லும் தொடருந்தும் சேவையில் ஈடுபடவில்லை.

இது தொடர்பில் தொடருந்து திணைக்களத்தின் பிரதி கட்டுப்பாட்டாளர் பொல்வத்தகே தெரிவிக்கையில், தொடருந்து சாரதிகள் பலர் ஒரே சந்தர்ப்பத்தில் விடுமுறை எடுத்துள்ளதால் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது. வார இறுதி நாட்களில் விடுமுறையை கோரினால் எம்மால் அதற்கு அனுமதி வழங்க முடியாது.

காரணம் ஏற்கனவே தொடருந்து சாரதிகள் சேவையில் பற்றாக்குறை நிலவுகிறது. எனவே விடுமுறை மறுக்கப்பட்ட காரணத்தால் அவர்கள் தாம் சுகயீன விடுமுறையிலிருப்பதாகத் தெரிவித்தனர்.

இதன் காரணமாகவே பல தொடருந்து சேவைகள் இடை நிறுத்தப்பட்டன. தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தாம் எவ்வாறான தொழிலில் இருக்கின்றோம் என்பதை உணர்ந்து செயற்படவேண்டும். அவ்வாறில்லை எனில் பயணிகள் பெரும் அசௌகரியத்தை எதிர்கொள்ள நேரிடும் என்றார்.

## இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கொழும்பில் உள்ள இரண்டு முன்னணி பாடசாலைகளுக்கு இடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டிக்கான ஏற்பாடுகள் மே 18 எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்றன, இதில் ஒரு பாடசாலையின் முன்னாள் மாணவரான சந்தேகத்திற்குரிய பிரிகேடியர் முந்தைய நாள், மே 17 இரவு சில பொருட்களுடன் மைதானத்திற்கு வருகை தந்துள்ளார்.

தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் பாதுகாப்பு அதிகாரியிடம், பொருட்களை மைதானத்திற்குள் கொண்டு செல்லும் வாகனத்தில் ஏறி, பொருட்களை மேலே கொண்டு செல்ல லிஃப்டை இயக்குமாறு பிரிகேடியர் கூறியிருந்தார். சாவி இல்லை என்று பாதுகாப்பு அதிகாரி கூறிய பிறகு, பிரிகேடியர் கோபமடைந்து, பாதுகாப்பு அதிகாரியை திட்டி, காது மற்றும் முகத்தில் அடித்தார். அந்த நேரத்தில், தாக்குதலில் இருந்து தனது சக பாதுகாப்பு அதிகாரியைக் காப்பாற்ற மற்றொரு பாதுகாப்பு அதிகாரி சம்பவ இடத்திற்கு வந்துள்ளார், பிரிகேடியர் அவரையும் தாக்கியுள்ளார்.

## விளையாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதைக் கண்டறிய பல கோணங்களில் விசாரணைகள் நடத்தப்பட உள்ளன

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வெல்லம்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்.

## பொருளாதாரத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு ஆளும்தரப்பின் மீது இருந்த நம்பிக்கை குறைவடைந்துள்ளதை தெளிவாக காட்டுகிறது. மக்கள் செல்வாக்கை இழந்து வருகின்றதை தற்போது ஆளும்தரப்பும் உணர்ந்துள்ளது. தேர்தலில் போட்டியிட்ட எதிர்க்கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்கள் அனைவரையும் திருடர்கள் என்றே தேசிய மக்கள் சக்தி தெரிவித்து வந்தது. அவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் எனவும் பரப்புரை செய்துவந்தார்கள். ஆனால் தேர்தலில் ஆளும்தரப்பு எதிர்பார்த்த வெற்றியை மக்கள் வழங்கவில்லை.

180க்கும் மேற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் ஆளும்தரப்புக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்பு ஒன்று குறுகிய காலத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இந்தளவு பின்னடைவைச் சந்தித்திருப்பது இதுவே முதல் தடவையாகும். ஆளும்தரப்பின் இயலாமையை மக்கள் தற்போது உணர்ந்துள்ளனர்.

அதனால் ஆளும்தரப்புக்கு பெரும்பான்மை இல்லாத உள்ளூராட்சி மன்றங்களில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பில் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரின் தலைமையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

கலந்துரையாடல்கள் சாதகமாகவே அமைந்துள்ளன. உள்ளூராட்சி மன்ற தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்கு 4 ஆயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர். அதனால் அதிகமான சபைகளில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்துச்சென்ற வழியை தவிர வேறு வழியில்லை. இந்த வழிக்கு மாற்றமாக பயணித்தால் நாடு வீழ்ச்சியடையும் என்றே தெரிவித்திருந்தோம்.

தற்போது ஆளும்தரப்பு செல்லும் பயணத்தை பார்க்கும்போது இந்த வருட இறுதிக்குள் நாடு வீழ்ச்சியடையும். அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பதற்கு ஒன்றிணைந்துள்ள எதிர்க்கட்சியினர் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை மீட்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## இங்கு ஆடைத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களை அழைத்துப் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மிகக் குறுகிய காலத்துக்குள் இந்த ஆளும்தரப்பு மக்களின் அதிருப்திக்குள்ளாகியுள்ளது. இதற்கு முன்னர் எந்தவொரு ஆளும்தரப்பும் குறுகிய காலத்துக்குள் தேர்தலொன்றை எதிர்கொண்டு, அதில் இந்தளவுக்குப் பின்னடைவை எதிர்கொண்டதில்லை. ஆளும்தரப்பின் இயலாமை தற்போது வெளிப்பட்டுள்ளது.

தமது இயலாமையை மறைப்பதற்காக தொடர்ச்சியாக பொய்களைக் கூறிவருகின்றது. அமெரிக்காவுடனான பேச்சு வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாகவும், விரைவில் கூட்டு அறிவித்தல் வெளியிடப்படும் என்றும் அரசுத் தலைவர் கூறினார். ஆனால் இதுவரையில் எந்தவொரு கூட்டு அறிக்கையும் வெளியிடப்படவில்லை.

மறுபுறம் இந்தியாவுடன் இரகசிய பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் தொடர்பான எவ்வித தகவலும் நாட்டுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. சுதந்திர வர்த்தக வலயத்தில் நெக்ஸ்ட் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. இந்தியா, பிரித்தானியாவுடன் அண்மையில் செய்து கொண்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் 99 சதவீத வரி குறைக்கப்பட்டுள்ளது. எனவே இந்த நிறுவனங்கள் தமது தொழிற்சாலைகளை இந்தியாவில் முன்னெடுத்துச் செல்ல திட்டமிட்டுள்ளன.

இலங்கையில் எதிர்காலத்தில் ஆடை தொழிற்சாலைகள் முற்றாக வீழ்ச்சியடையும் என்பதற்கான முன்னெச்சரிக்கையாகவே இந்த தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. அவ்வாறு இடம்பெற்றால் ஆயிரக்கணக்கானோர் தொழிலை இழக்க நேரிடும். ஆளும்தரப்பு அதற்கு தயாராகிறதா?

வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் எந்தவொரு அமைச்சரும் எந்தவொரு நாட்டுடனும் பேச்சு நடத்துவதில்லை. அவ்வாறிருக்கையில் எவ்வாறு வெளிநாட்டு முதலீடுகளைப் பாதுகாக்க முடியும்? நாட்டு மக்களின் எதிர்காலம் அச்சுறுத்தல் மிக்க நிலைமையிலேயே காணப்படுகிறது என்றார்.

## முதலமைச்சர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான அதாஉல்லா மற்றும் முஷாரப் ஆகியோருடன் எமது கட்சி பேச்சு நடத்தியது உண்மையே. இதில் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பிலும் மற்றும் சில பொதுவான விடயங்களுமே பேசப்பட்டன. மேலும், முஸ்லிம் கட்சிகளுக்கிடையேயும் முக்கியஸ்தர்களிடையேயும் ஒற்றுமையை ஏற்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

ஆனால், கிழக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக தேசிய காங்கிரஸ் தலைவர் அதாஉல்லாவைக் களமிறக்குவது குறித்தோ அதற்கு எமது கட்சி இணக்கம் தெரிவிப்பது தொடர்பிலோ இந்தச் சந்திப்பில் எதுவுமே பேசப்படவில்லை என்றார்.

## ஜூன் 3....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து 10 மணி முதல் 11 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை காலை 11 மணி முதல் 11.30 மணிவரையான நேரம் நிலையியற் கட்டளை 27(2)ன் கீழான கேள்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத்

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

# இந்திய மீனவர் அத்துமீறல், போதைப்பொருள் கடத்தல்களை முறியடிக்கத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குக

## கடற்படையினருக்கு ஆலோசனை

இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்கும், மீன்பிடி என்ற போர்வையில் இடம்பெறும் போதைப்பொருள் கடத்தல்களை முறியடிப்பதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கடற்படையினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சுக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நாடாளுமன்ற வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜெயசேகர, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே, இரு அமைச்சுகளினதும் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் கடற்படை தளபதி உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

காணிப்பிரச்சினை, மீன்பிடி துறைமுகங்களில் நிலவும் பிரச்சினைகள், தடைசெய்யப்பட்ட உபகரணங்களைப்பயன்படுத்திசட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் விவகாரம், போதைப்பொருள் கடத்தல் மற்றும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறுவது உள்ளிட்ட





விடயங்கள் சம்பந்தமாக இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன.

மேற்படி பிரச்சினைகளுக்குரிய தீர்வுகள் பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளன.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு மத்தியிலேயே போதைப்பொருள் கடத்தலும் இடம்பெறுகின்றது. எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்கும், இலங்கை கடல் வளத்தை பாதுகாப்பதற்கும் தேவையான அனைத்து வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு இக்கூட்டத்தின் கடற்படையினருக்கு ஆலோசனை



வழங்கப்பட்டுள்ளது.

# பாராட்டு நிகழ்வு

(அஷ்ரப்கான்)

ஒலுவில், அல் - ஹம்றா மகா வித்தியாலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர் எஸ்.ஹாஸீக் இலங்கை ஆசிரியர் கல்வியலாளர் சேவைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஒலுவில் அல் - ஹம்றா மகா வித்தியாலயத்தின் பாடசாலை காலை ஆராதனை நிகழ்வில் அதிபர் அஷ்ஷெய்க் யூ.கே.அப்துர் ரஹீம் தலைமையில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற இப்பாராட்டு நிகழ்வில் சம்சுதீன் ஹாசீக் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில், பிரதி அதிபர்களான ஏ.கமருன் நிஷா, ஜே.வஹாப்தீன், உதவி அதிபர் எம்.எச்.எம்.நசீம் உட்பட

ஆசிரியர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு வாழ்த்துக்களையும் பாராட்டையும் தெரிவித்தனர்.

# ஓய்வுபெற்ற அதிபருக்கு கௌரவிப்பு நிகழ்வு!

(பர்ஸான்)

ஓட்டமாவடி – மீராவோடை மீரா ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் ஓய்வுபெற்றுச் சென்றுள்ள அதிபர் எம்.எம்.மஹ்ரூபை கௌரவிக்கும் நிகழ்வு மீரா ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வு, பள்ளிவாசல் தலைவர் எம்.எம்.ரஷீத் தலைமையில் இடம்பெற்றது.

மீராவோடை அமீர் அலி வித்தியாலயத்தில் சுமார் 17 வருடங்களாக எம்.எம்.மஹ்ரூப் அதிபராக சேவையாற்றி வந்துள்ளார்.

இவர், அண்மையில் தனது கல்விப் பணியிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார்

ஓய்வுபெற்றுச் சென்றுள்ள அதிபரை கௌரவிக்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீர், ஓட்டமாவடி பிரதேச சபையின் உறுப்பினர் கே.பி.எஸ்.ஹமீட், மீராவோடை அல் ஹிதாயா வித்தியாலய அதிபர் ஏ.ஜே.மர்சூக், உதுமான் வித்தியாலய அதிபர் எம்.பி.மர்சூக், அல்மினா வித்தியாலய அதிபர் எம்.ஐ.உபைத், இக்பால் வித்தியாலய அதிபர் எம்.சீ.எம்.ஐயூப்கான் மற்றும் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.



# இந்திய பொற்கிழி பெற்ற பாவேந்தல் பாறூக் அவர்களுக்கு பாராட்டு விழா

(நவாஸ்)

உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய (திருச்சி) 2025 மகாநாட்டில் இலக்கியச் சுடர் விருது கவிஞர் காரை இறையடியான் நினைவாக பேராசிரியர் மு. இ. அஹமது மரைக்காயர், பேராசிரியர் ஓ. நசீமா பானு ஆகியோர் வழங்கிய பொற்கிழியும் ( இந்தியா ரூ.20,000.00) பெற்ற பாலமுனை பாவேந்தல் பாறூக் அவர்களை பாராட்டும் பெருவிழா 2025.05.25 ஆம் திகதி அட்டாளைச்சேனை பிரதேச கேட்போர் கூடத்தில் செயலாளர் அஹமட் அப்கர் தலைமையில் இடம் பெற்றது.



இந்நிகழ்வின் பிரதம அதிதியாக மேல் நீதிமன்ற நீதிபதி (திருகோணமலை) என்.எம்.அப்துல்லாஹ் மற்றும் கௌரவ அதிதிகளாக முன்னாள் முதலமைச்சின் செயலாளர் யூ.எல்.எ.அஸீஸ், பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, கவிஞர் மௌலவி எம்.எச்.எம். புகாரி, பல் துறைக் கலைஞர் கோவிலூர் செல்வராசா, விரிவுரையாளர் எம். அப்துல் றசாக், முன்னாள் பிரதேச சபை தவிசாளர் சட்டத்தரணி எம்.எ.அன்ஸில், மாவட்ட, பிரதேச கலாசார உத்தியோகத்தர்களான ஏ.எல்.தௌபீக், எம்.எஸ்.ஜௌபர் மற்றும் சிறப்பு அதிதிகள் மற்றும் முன்னிலை அதிதிகள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், துறைசார்ந்த கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களுக்கு கலாசார பேரவையினால் பொன்னாடை மற்றும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும் பல்துறைக் கலைஞர் கோவிலூர் செல்வராசா அவர்களினால் அக்கரையூர் அப்துல் குத்தூஸ், பாவேந்தல் பாலமுனை பாறூக் ஆகியோர்களால் எழுதிய பாடல்கள்



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எதற்கு மேலும் தாமதம்?

**கடந்த ஐந்து ஆண்டுகளாக மாகாண சபைகள் முற்றிலுமாக செயலிழந்த நிலையிலேயே உள்ளன. இதனால், வடக்கு மற்றும் கிழக்கு மட்டுமின்றி, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மக்களின் பங்களிப்புடன் இயங்க வேண்டிய பிராந்திய ஆட்சி முடக்கப்பட்டிருக்கிறது.**

**இந்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், மாகாண சபைத் தேர்தலை நடத்தக்கூடிய வகையில், தேர்தல் திருத்தச் சட்டமுயற்சியை தனிநபர் பிரேரணையாக வர்த்தமானியில் அறிவித்திருக்கிறார். அவர் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தும், இந்தச் சட்டமுயற்சியை முன்வைத்திருப்பது அரசியல் மீதான அவரது பொறுப்புணர்வையும், ஜனநாயகப்பண்புகளுக்கான அவரது மரியாதையையும் காட்டுகிறது.**

**ஆனால், இவ்வாறு எதிர்க்கட்சி உறுப்பினரால் முன்வைக்கப்பட்ட சட்டமுயற்சி, செயற்கை அலட்சியத்தால் புறக்கணிக்காமல், அதனை நிறைவேற்றுவதற்கு ஆளும்தரப்பின் செயல் பங்குதான் இப்போது முக்கியமானதாக இருக்கிறது. ஆட்சியில் உள்ளவர்கள், இந்தமுயற்சியைஅடங்கலாக்காமல், தனதுசுயநலஅரசியல் கணக்குகளுக்குள் புதைத்துவிடாமல், நேர்மையான அரசியல் ஒழுக்கத்துடன் இதை முன்னெடுக்கவேண்டும். ஏனெனில், இது வெறும் தேர்தலுக்கான பரப்புரை அல்ல, மாகாண மக்களின் நிர்வாக உரிமைக்கு உரிய இடம் வழங்கும் ஜனநாயகத் தீர்வாக இருக்கிறது.**

**மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான அமைச்சு மட்டப் பணிகள் தொடங்கப்பட்டிருப்பதாக அண்மையில் ஆளும்தரப்புத் தெரிவித்திருந்தது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் ஆளும் தரப்பு உண்மையான அக்கறை கொண்டிருந்தால், அதற்கு மாகாண சபைச் சட்டத்தை திருத்தவேண்டியது அவசியமாகிறது. அதற்கு சாணக்கியனின் தனிநபர் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்து, அதனைன தீர்மானமாக்கவேண்டியது ஆளும்தரப்பின் கடமை.**

**இதுபோன்றதொரு பிரேரணை கடந்த ஆட்சிக் காலத்தில் அப்போது நாடாளுமன்ற உறுப்பிராக இருந்தவரான சுமந்திரனால் முன்வைக்கப்பட்டு, அது நாடாளுமன்றத்தில் இரண்டாம் வாசிப்பு வரையில் நிறைவேற்றப்பட்டும் இருந்தது. ஆனால் அதனை மூன்றாவது வாசிப்பில் நிறைவேற்றி சட்டமாக்க அப்போதைய அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது தலைமையிலான ஆட்சியாளர்களும் தயாராக இருக்கவில்லை. அதுபோன்றதொரு நிலை மீண்டும் ஏற்படக்கூடாது.**

**மாகாண மக்கள், குறிப்பாக தமிழர் பெருமளவில் வாழும் வடகிழக்கு மாகாண மக்கள், மீண்டும் மீண்டும் கொழும்பு ஆட்சியாளர்களால் அரசியல் புறக்கணிப்புக்குள்ளாவதை உணர்கிறார்கள். இது, ஜனநாயகத்தில் நம்பிக்கை இழப்பை ஏற்படுத்தும் அபாயத்தைக் கொண்டுள்ளது. மாகாண சபைத் தேர்தலை சட்டத்தைக் காரணம் காட்டி ஒத்தி வைத்துக்கொண்டே இருக்காமல், அவை நியாயமான முறையில், தேர்தல் சட்டத்தை திருத்தி நடத்தவேண்டும்.**

**இப்போது ஆளும்தரப்பு, சாணக்கியனின் சட்டமுயற்சியை ஆதரித்து, அதனை விரைந்து நிறைவேற்றவேண்டும். பின்னர், தேர்தலுக்கான தேதிகளை அறிவித்து, மக்களிடம் அதற்கான நம்பிக்கையை மீட்டுத்தர வேண்டும்.**

**நேர்மையான ஜனநாயகத்திற்கு, பங்குபற்றும் ஆட்சி முக்கியம். அதற்கான வாய்ப்புகளை ஒதுக்கி, சுயநல அரசியலை முன்னிறுத்துவதேனும் தொடர்ந்தால், அதன் விளைவுகள்நீண்டகாலத்திற்குஅழிவைத்தரும். இப்போதுகூட காலம் இருக்கின்றது. அதைப் பயன்படுத்துங்கள்.**

# தலவாக்கலை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம்

*(கேதீஸ்)*

*தலவாக்கலை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தமக்கு தேவையான பௌதீக வளங்களை உடனடியாக அரசாங்கம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி அரசாங்கத்திற்கு எதிராக நேற்று (திங்கட்கிழமை) தலவாக்கலை பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.*

*தலவாக்கலைபிரதேசசெயலக அலுவலகம் தற்போது தலவாக்கலை-லிந்துலை நகர சபைக்கு சொந்தமான கட்டடத்தின் மேல் தளத்தில் அமைந்துள்ளதாகவும், அந்த கட்டடத்தின் வளாகம் அலுவலக அதிகாரிகளுக்கு போதுமானதாக இல்லை என்றும் போராட்டத்தில் ஈடுப்பட்ட ஊழியர்கள் தெரிவித்தனர்.*

*தலவாக்கலை பிரதேசத்திலுள்ள பெருந்தோட்டங்கள் மற்றும் கிராமங்களை சேர்ந்தஆயிரக்கணக்கானமக்கள்தலவாக்கலை பிரதேச செயலகத்தினூடாக நாளாந்தம் சேவையை பெற்றுக்கொள்கின்றனர்.*

*இந்நிலையில் பிரதேச செயலக அலுவலகம், அதன் அதிகாரிகள் மற்றும் சேவைகளைப் பெற வரும் மக்கள் முறையான பௌதீக வளங்கள் இல்லாததால் கடுமையான சிரமங்களையும் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்கொள்கின்றனர் என போராட்டத்தில் ஈடுப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.*

*மழை நாள்களில் சேவையை பெற வரும் மக்கள் நிற்ககூட இடமில்லாமல் பாதிக்கப்படுகின்றனர் எனவும், விசேட தேவையுடையோர்கள் மேல் தளங்களுக்கு சென்று தங்கள் வேலையைச் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.*

*இந்துப் பிரச்சினைக்குத் தீர்வாகப் பிரதேச செயலகம் அமைந்துள்ள கட்டடத்தின் கீழ் அமைந்துள்ள கட்டடத்தை வழங்குவதாகப் பொறுப்பான அதிகாரிகள் பல தடவைகள் கூறியிருந்தாலும், இதுவரை நடைமுறைக்கு வரவில்லை. கீழேயுள்ள கட்டடத்தை வழங்காவிட்டாலும் பரவாயில்லை. இங்கு அமைந்துள்ள பிரதேச செயலகத்தை நன்கு வசதிகளுடன் கூடிய வேறு இடத்தில் நிறுவுமாறு அரசாங்கத்துக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.*

*தொழிற்சங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்துப் போராட்டமானது தலவாக்கலை பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு ஊர்வலமாக தலவாக்கலை ஹற்றன் பிரதான வீதி வழியாக தலவாக்கலை பிரதான சுற்று வட்டம் வரை சென்று மீண்டும் அங்கிருந்து ஊர்வலமாக தலவாக்கலை பிரதேச செயலகம் வரை வந்து முடிவடைந்தது.*

*இந்த ஆர்பாட்டத்தில் தலவாக்கலை பகுதியைச் சேர்ந்த பொது மக்கள், தலவாக்கலை பிரதேச செயலக ஊழியர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.*





காலைக்கதிர் Kalaikkathir

# இறக்காமம், பொத்துவில் பிரதேச சபைகளில் ஆட்சி அமைவது தொடர்பில் கருத்தறியும் கலந்துரையாடல்

(நூருல் ஹுதா உமர்)

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர், இறக்காமம், பொத்துவில் ஆகிய பிரதேச சபைகளில் ஆட்சி அமைவது தொடர்பில் கருத்தறியும் கலந்துரையாடலொன்று புணாணை ஐசிஎஸ்டி வளாகத்தில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை மாலையில் நடைபெற்றது.



அக்கட்சியின் இறக்காமம், வரிப்பத் தான்சேனை, பொத்துவில் மத்திய குழுக்களுடனான இக் கலந்துரையாடலில் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர், கட்சியின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ .எம். ஹிஸ்புல்லாஹ், கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். எஸ் உதுமாலெப்பை, பிரதித் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ .எம் .மன்சூர், கட்சியின் அம்பாறை மாவட்டச் செயலாளர் ஏ .சீ.சமால்தீன், உயர்பீட உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், உயர்பீட உறுப்பினர்கள் ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# அரச நியமனம் கோரி தனிநபர் போராட்டம்

## கிழக்கு ஆளுனர் செயலகம் முன்னால்

திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுனர் செயலகம் முன்பாக அரச நியமனம் கோரி பட்டதாரி ஒருவர் நேற்று (திங்கட்கிழமை) தனி நபர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

மாம்பழ வியாபாரி போன்று கோர்ட் சூட் அணிந்து தனிநபர் போராட்டத்தில் தனது பட்டத்தை கையில் எடுத்து போராட்டத்தில் குதித்தார்.

கிண்ணியாவை சேர்ந்த குறித்த பட்டதாரி தெரிவிக்கையில் அரச துறையில் நியமனத்தை வழங்குங்கள்.. கலைப் பட்டத்தை இல்லாமல் ஆக்குங்கள் உள்ளிட்ட விடயங்களை முன்னிறுத்தி போராடுவதாகத் தெரிவித்தார்.



# கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலையில் வகுப்பறைகளுக்கு பெயர் பலகை வழங்கல்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலைக்கு வகுப்பறைகளுக்கான பெயர் பலகைகள் வழங்கும் நிகழ்வு கல்லூரியின் முதல்வர் எஸ்.கலையரசனிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்று மருதமுனை பைத்துல் ஹெல்ப் நிறுவனத்தின் தலைவர் எம்.எச்.றைசுல் ஹக்கீமினால் உத்தியோகபூர்வமாக வகுப்பறைகளுக்கான பெயர் பலகைகள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நிறுவனத்தின் உயர் பீட உறுப்பினர்கள் மற்றும் பிரதி அதிபர், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

அண்மைக் காலங்களில் இவ்வமைப்பினூடாக கிழக்கு மாகாணங்களிலுல்ல பல பாடசாலைகளுக்கு நீர்த்தொட்டி விநியோகம், கற்றல் உபகரணங்கள் மற்றும் குடிநீர் வசதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் இலங்கை பைத்துல் ஹெல்ப் அமைப்பின் பிரதானி ரைஸுல் ஹக்கீம் சமூக நலன்கருதி இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



அத்துடன் பைத்துல் ஹெல்ப் அமைப்பு அரச காரியாலயங்கள், பாடசாலைகள், பள்ளிவாசல்களுக்கு இலவச குடிநீர் வழங்குதல் மாணவர்களின் கல்விக்கு கைகொடுத்தல் குர்ஆன் பிரதிகளை இலவசமாக வழங்குதல் என பல சமூக நல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

# நிந்தவூர் பிரதேசத்தில் டெங்கு தடுப்பு நடவடிக்கை

(பாறுக் ஷிஹான்)

நிந்தவூர் பிரதேசத்தில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி எஸ். சஹிலா இஸ்ஸடீனின் ஆலோசனைக் அமைய நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரிகள் வைத்தியர் திருமதி எஸ். ஜீவா இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

இதற்கமைய நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நிந்தவூர் அல் மஸ்லம் வித்யாலயத்துடன் இணைந்து ஏற்பாடு செய்து டெங்கு நோய் தடுப்பு செயற்திட்டம் நேற்று நிந்தவூர் கல்முனை அல் மஸ்லம் வித்யாலய சுற்றுவட்டாரத்தில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் இஷட் அகமட் பங்களிப்போடு நிந்தவூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் திருமதி எஸ். ஜீவா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எம்.எம்.பைசால், பொது சுகாதார பரிசோதகர் ஆர். நிதுர்சன் உட்பட பாடசாலையின் மேல் வகுப்பு மாணவர்களும் கலந்து கொண்டனர் .

இதன்போது டெங்கு நுளம்புகள் அற்ற பாதுகாப்பான பிரதேசமாக பாடசாலை சுற்றுச்சூழலை மாற்றி அமைக்கும் நோக்குடன் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் பாடசாலை சூழலில் உள்ள வீடுகளுக்கு தரிசிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் கண்டறியப்பட்டு அழித்தொழிக்கப்பட்டதுடன் டெங்கு நுளம்பு குடம்பிகள் பெருகும் வகையில் சுற்றாடலை பாதுகாப்பற்ற முறையில் வைத்திருந்தவர்களுக்கு எச்சரிக்கைகளும் வழங்கப்பட்டது.






# கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக லக்ஸ்மன்

(சியாஜ்)

கற்பிட்டி. பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக மீண்டும் லக்ஸ்மன் றன்வலராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்த மேற்படி லக்ஸ்மன் றன்வலராச்சி முன்னைய ஆட்சியில் அரசியல் பழிவாங்கள் மூலம் இடமாற்றம் பெற்று சென்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# உகந்தை மலையில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை உடன் அகற்றப்படவேண்டும்

## பிரதீவன் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

தமிழர் பாரம்பரிய வரலாற்று ஆதாரங்களுடன் காணப்படும் பூர்வீகங்களை அழித்தலுடன் தொடரும் ஆக்கிரமிப்புகள் யாவும் நிறுத்தப்பட வேண்டும் என மனித உரிமை செயற்பாட்டாளரும் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க ஆலோசகருமான தாமோதரம் பிரதீவன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் உகந்தை மலையிலுள்ள ஆலயம் அதனுடன் இணைந்த கடற்கரையிலுள்ள மலையில் வைக்கப்பட்டுள்ள புத்தர் தொடர்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது –

தமிழர் பாரம்பரிய வரலாற்று ஆதாரங்களுடன் காணப்படும் பூர்வீகங்களை அழித்தலுடன் ஆக்கிரமித்தலும் அண்மைக்காலமாகத் தொடர்கின்றது

உகந்தை முருகன் ஆலய வளாகத்தில் புராதன தமிழர் வாழ்வியல் ஆதாரங்களைச் சிதைப்பதும் அதை அழிப்பதும் ஆக்கிரமிப்பதும் எனும் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ள இந்த புத்தர் சிலையானது உகந்தை முருகன் ஆலய முன் வாயிலின் முன்பாகக் செல்லும் போது கடற்கரையில் இடது புறமாகக் காணப்படும் மலையில் கடற்படை முகாம் முன்பாகவுள்ள மலையில் கடற்படையின் தொடர்பு கோபுரம் முன்பாக அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் இது உகந்தை முருகன் ஆலய புராதன வரலாறு கொண்ட புண்ணிய பூமியாகும் இங்கு எவ்வாறு இவர்கள் புத்தர் சிலை நிறுவலாம் எனும் கேள்வியோடு உகந்தைமலையில் 25 அடி முருகன் சிலை நிறுவும் பணியைத் தடுத்த வன திணைக்களத்தினரும் அரசும் ஏன் இதைத் தடுக்கவில்லை எனும் கேள்விக்குப் பதில் தர வேண்டும்.

அத்தோடு உகந்தை முருகன் ஆலய வளாகத்திலும் அதனைச் சூழவும் வன திணைக்களத்தினர் மற்றும் படையினர் புதிய பல நிபந்தனைகளையும் விதித்து ஆலய சூழலைச் சுருக்கியுள்ளனர், பல கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளனர், வள்ளிமலை போன்ற இடங்களுக்குச் செல்லவும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர், இது தவிர சந்நியாசி மலையும் பறிபோகும் அபாயம் காணப்படுகிறது.

இந்த சிலை விவகாரமும் எமது ஒற்றுமையின்மை, இனம், மதம் என்ற எண்ணமும், பற்றும் அற்றவர்களால் அங்கு ஏற்பட்ட நிர்வாகமின்மை இடைவெளியில் ஏற்பட்ட நிலைமைகள்தான் இவை.

அத்தோடு இந்த இடத்தில் சிலை வைப்பதற்கான ஆயத்தமாக மலையில் பீடம் அமைத்தபோது கடந்த 2024 இல் நான் நேரில் சென்று அவதானித்ததோடு இதுபற்றி உரியவர்கள் சிலரோடு பேசினேன் அத்துடன் இது உகந்தை ஆலய சூழலில் நிறுவப்பட்டுள்ள இரண்டாவது புத்தர் சிலை அத்துடன் இன்னும் ஒரு சிலைக்கான பீடமும் அமைக்கப்பட்டுள்ளது இதன் பின்னணியில் சிங்களவர்கள் பலரைக் குடியேற்றும் திட்டம் மற்றும் வன திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் மலையில் நிறுவப்படவிருந்த 25 அடி முருகன் சிலையை நிறுவாமல் தடுத்தது அதன் பின்னர் தற்போது புத்தர் சிலை வைத்தது அதற்கு உடந்தையாக இருந்த படைகள், அதிகாரிகள் உள்ளிட்ட பல விடயங்கள் மக்களுக்குத் தெரிய வேண்டும்.

இந்த சிலை உடனடியாக அகற்றப்படுவதோடு இந்த அரசு எமது மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# தென்கிழக்கு பல்கலைக்கு புதிய உபவேந்தர் நியமனம்

(பாறுக் ஷிஹான்)



தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் புதிய உபவேந்தராக மருதமுனையைச் சேர்ந்த பேராசிரியர் கலாநிதி எஸ்.எம்.ஜுனைதீன் நேற்று (திங்கட்கிழமை) நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பதவிக்காலம் நிறைவடைந்த நிலையில் கடந்த ஒகஸ்ட் 8ஆம் திகதி முதல் தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பதவி வெற்றிடமாகக் காணப்படுகின்றது.

புதிய உபவேந்தரைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு கடந்த காலத்தில் நடைபெற்ற நிலையில் இப்பல்கலைக்கழகத்தின் தொழிநுட்பவியல் பீடத்தின் பீடாதிபதியான கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் பதில் உப வேந்தராக செயற்பட்டு வந்தார்.

இந்நிலையில் பேரவையின் பரிந்துரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழகங்கள் சட்டத்துக்கமைவாக பேரவையினால் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதியால் பொறியியல் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எஸ்.எம்.ஜுனைதீன் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக மே மாதம் 26 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



# திருகோணமலை நிலா வெளி சுற்றுலா கடற்கரையில் துப்புரவாக்கல் நிகழ்வு

(ஹஸ்பர்)

நிலாவெளி பிரதேச சுற்றுலா கடற்கரைரை சுத்தம் செய்யும் நிகழ்வும் மற்றும் நீருக்கடியில் சுத்தம் செய்யும் நிகழ்வானது நேற்று (திங்கட்கிழமை) இடம் பெற்றது.

குறித்த நிகழ்வை திருகோணமலை மாவட்ட ஹோட்டல் சங்கம் இணைந்து கிராம மக்களும் கிராம அபிவிருத்தி சங்கம் பெருங்கடல் மீனவர் சங்கம் நன்னீர் கலப்பு சங்கம் மற்றும் நிலாவெளி உல்லாச பிரயாணியின் படகு சங்கம் உள்ளிட்ட பல அமைப்பினர் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தனர்.

சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும், நிலாவெளி சுற்றுலா தளத்தின் வளர்ச்சியை அதிகப்படுத்தவும் இது ஒரு சிறந்த வாய்ப்பாக காணப்படுகிறது.

இதன்போதுநிலாவெளிகடற்கரையானது அதிகளவான வெளிநாட்டு உள்நாட்டு சுற்றுலா பயணிகளை கவரக்கூடியது



இங்கிருந்தே புறாத் தீவை நோக்கியும் அதிக பயணிகள் செல்கின்றனர். இதனால் கடற் கரை சுத்தம் செய்வதால் சிறந்ததொரு சுற்றுச் சூழலை உருவாக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் சுற்றுலா சங்க தலைவர் குச்சவெளி நிலாவெளி பொலிஸ் பொறுப்பதிகாரிகள் வெளிநாட்டவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# திருக்குளிர்த்தி சடங்கு காலத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்படும்:

## ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்

(சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம் வருடாந்த திருக்குளிர்த்தி சடங்கு காலத்தின் பொழுது காரைதட பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்று திருக்குளிர்த்தி சடங்கு தொடர்பான ஆலோசனை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.

குறித்த சடங்கு தொடர்பான ஆலோசனை கூட்டம் ஞாயிற்றுக்கிழமை ஆலய மண்டபத்தில் தர்மகர்த்தார்களான இரா.குணசிங்கம், எஸ்.நமசிவாயம், சா.கனகசபேசன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

அங்கு காரைதீவு உதவிப் பிரதேசசெயலாளர் எஸ். பார்த்திபன், காரைதீவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர் எஸ் .ஜெகத், பிரதேச சபை செயலாளர் அ. சுந்தரகுமார் உள்ளிட்ட தலைமைகள் கலந்து கொண்டனர்.

காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மனின் வருடாந்த திருக்குளிர்த்திச் சடங்கு எதிர்வரும் திங்கட்கிழமை 2ஆம் திகதி கதவுதிறத்தல் கடல்தீர்த்தம் கொணரல் கல்யாணக்கால் நடல் நிகழ்வுகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 07தினங்கள் சடங்கு இடம்பெற்று 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை திருக்குளிர்த்தி பாடலுடன் சடங்கு நிறைவுறும்.

கூட்டத்தில் சுகாதாரம் போக்குவரத்து வீதி தொண்டர் நடைமுறை பாதுகாப்பு குடிநீர் வசதி உள்ளிட்ட பல துறைகள் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

கலந்து கொண்ட பிரமுகர்களின் ஆலோசனைகளும் பெறப்பட்டது.

இறுதியில் அனைவருக்கும் திருக்குளிர்ச்சி விஞ்ஞாபன நோட்டீஸ் வழங்கி வைக்கப்பட்டது.







# உகந்தமலை முருகன் ஆலய ஆடிவேல் மகோற்சவம் ஜூலை 25 இல் ஆரம்பம்

(சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் ஜூலை மாதம் 25ஆம் திகதி கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகின்றது என்று ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க சுதா தெரிவித்தார்.



உகந்தை மலை ஸ்ரீமுருகன் ஆலய கொடியேற்றம் எதிர்வரும் ஜூலை மாதம் 25 ஆம் திகதி ஆலயபிரதம குரு சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் நடைபெற இருக்கின்றது.



கொடியேற்றம் தொடங்கி தொடர்ச்சியாக 16 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் இடம் பெறும்.

உற்சவ காலங்களில் போக்குவரத்து மற்றும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதுஇவ்வாறுஇருக்ககதிர்காமத்துக்கான உகந்தைமலை ஊடான காட்டுப்பாதையில் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் பயணிக்கும் பக்தர்களின் எண்ணிக்கை இம்முறை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## ஜூன் 3....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து 11.30 மணி முதல் மாலை 5 மணி வரை தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்திற்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் 5 மணி முதல் 5.30 மணி வரை ஆளும்கட்சியினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்புவேளையின்போதானபிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

ஜூன் 4 புதன்கிழமை காலை 9.30 மணி முதல் மு.ப. 10மணி வரை ஆரம்ப நடவடிக்கைகளைத் தொடர்ந்து 10 மணி முதல்.10.30 மணிவரை பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்படுள்ளது.

11.30 முதல் 12.30 மணி வரை குற்றவியல்நடவடிக்கைமுறைச்சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் குழுநிலையில் ஆராயப்பட்டு மூன்றாவது மதிப்பீட்டுக்காக சமர்ப்பிக்கப்படும்.

மதியபோசன இடைவேளையைத் தொடர்ந்து 1 மணி முதல் 5 மணி வரை ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் 2428/43ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. இதனைத் தொடர்ந்து 5 மணி முதல் 5.30 மணி வரை ஒத்திவைப்பு வேளையின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜூன் 5 வியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் 10மணி வரை பிரதான நடவடிக்கைகளை தொடர்ந்து 11 மணி முதல் 11.30மணிவரைநிலையியற்கட்டளை27(2)ன் கீழான கேள்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

11.30 மணி முதல் 5மணி வரை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம்தொடர்பானஇரண்டாவதுமதிப்பீட்டு விவாதம் இடம்பெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து 5 மணி முதல் 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்புவேளையின்போதானபிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

ஜூன் 6 வெள்ளிக்கிழமை 9.30 மணி முதல் பிரதான நடவடிக்கைகள் மற்றும் வரை வாய்மூலவிடைக்கானவினாக்களுக்குநேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. 11 மணி முதல் 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, 11.30 முதல் 5 மணிவரை மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான கோலசல நுவான் ஜயவீர, ஜே.ஆர்.பி.சூரியப்பெரும, இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, டொனால்ட் திசாநாயக்க ஆகியோர் தொடர்பான அனுதாபப்பிரேரணை எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதன் பின்னர் 5மணி முதல் பி.ப 5.30 மணிவரைஒத்திவைப்புவேளையின்போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.






# மூன்று வயதில் சாதனை

(சுபேசன்)

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனமும்-தென்மராட்சி மக்களும் இணைந்து முன்னெடுத்த மூன்று வயதுச் சிறுமியான செல்வி ஜெயகரன் தஸ்விகாவின் உலக சாதனை நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் ஓய்வுநிலை அதிபர் தங்கவேலு தலைமையில் இடம்பெற்றிருந்தது.



இதன்போது ஞாயிற்றுக்கிழமை தனது மூன்றாவது பிறந்தினத்தைக் கொண்டாடும் தஸ்விகா 1500 தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலப் பதத்தைக் மிக விரைவாகக் கூறி உலக சாதனையை நிலைநாட்டி சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்திருந்தார்.

தனது தாயார் தமிழ்ப் பதங்களைக் கூற அதற்கான ஆங்கிலப் பதங்களை மிக விரைவாகவும்-அதேநேரம் சுலபமாகவும் பதிலளித்து அவர் இந்த உலக சாதனையைப் படைத்திருந்தார்.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணபல்கலைக்கழகமொழிபெயர்ப்புக் கற்கைகள் துறைத் தலைவர் ச.க.கண்ணதாஸ் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி இ.அபிராமி,

கௌரவ விருந்தினராக உலக சாதனையாளர் திருச்செல்வம் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

அதேநேரம் சோழன் உலக சாதனை நிகழ்வுக்கான நடுவர்களாக சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவன இலங்கைக் கிளை துணைத்தலைவர் நாகவாணி ராஜா, இலங்கைக் கிளையின் துணைச் செயலாளர் த.இன்பராசா, யாழ்ப்பாண மாவட்ட தலைவர் லயன் துரை பிரணவச்செல்வன் மற்றும் கிளிநொச்சி மாவட்டத் தலைவர் லயன் இ.ஜெயசுதர்சன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

நிகழ்வில் கல்வியியலாளர்கள், சமூக சேவையாளர்கள், சிறுமியின் உறவுகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது சிறுமியின் திறமையைப் பாராட்டி சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தால் சிறுமிக்கு 'மழலை மொழி வித்தகர்' எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஐஸ் போதைப் பொருளுடன் கைதானவரிடம் விசாரணை

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப் பொருளுடன் கைதான இளைஞனிடம் மேலதிக விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் நடமாடிய இளைஞனை வெள்ளிக்கிழமை இரவு கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 26 வயது மதிக்கத்தக்க 2 பிள்ளைகளின் தந்தையான மருதமுனை பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருளுடன் கல்முனை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 710 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர் உட்பட சான்றுப்பொருள்கள் யாவும் சட்ட நடவடிக்கைக்காக பெரியநீலாவனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# மருதமுனை பிரதேச மக்களுக்கான அறிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

மருதமுனை பிரதேச மக்களுக்கான அறிவித்தல் எனும் தலைப்பில் மருதமுனை அனைத்துப் பள்ளிவாசல்கள் அமையம் எனும் பெயரில் துண்டுப்பிரசுரம் ஒன்று விநியோகிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை பகுதியில் வாழும் மக்களுக்கான குறித்த அறிவித்தல் தொடர்பில் பல்வேறு விடயங்கள் அத்துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் மருதமுனை அனைத்துப் பள்ளிவாசல்கள் அமையம் அண்மையில் கூட கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸாரையும் சந்தித்து கலந்துரையாடி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மருதமுனையின் தற்போதைய நிலை – மாணவர்கள் நலன் – இளைஞர்களின் போக்கு, மருதமுனையின் எதிர்கால செயற்பாடுகள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# ஆசியாவின் தலைசிறந்த 100 விஞ்ஞானிகளில் ஒருவராக யாழ். பல்கலை பௌதிகவியல் பேராசிரியர் ரவிராஜன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பௌதிகவியல் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன் சிங்கப்பூரிலிருந்து வெளியிடப்படும் முன்னணி 'ஆசிய விஞ்ஞானி' எனும் சஞ்சிகை இன்



'ஆசிய விஞ்ஞானி; - 100 பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.

ஆண்டுதோறும் வெளியிடப்படும் இந்த பட்டியல், ஆசியாவிலுள்ள தலைசிறந்த விஞ்ஞானிகளின் விசேட சாதனைகளை அங்கீகரிக்கிறது. பொதுவாக, இந்த பட்டியலில் தேர்வு செய்யப்படும் தலைசிறந்த விஞ்ஞானிகள், அவர்களின் தரமான ஆய்வு வெளியீட்டுக்கப்பால் தேசிய அல்லது சர்வதேச விருதை பெற்றிருக்க வேண்டும். பதிலாக முக்கியமான விஞ்ஞான கண்டுபிடிப்பொன்றை மேற்கொண்டிருக்க வேண்டும் அல்லது கல்விசார் அல்லது தொழில்சார் தலைமைத்துவத்தை வழங்கியிருக்க வேண்டும்.

விஞ்ஞானப் பீடாதிபதியாக கடந்த ஐந்து ஆண்டுகள் பணியாற்றிவரும் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன் அவர்கள் பல தேசிய விருதுகளைப் பெற்றுள்ளார். இவற்றில், துணைவேந்தர்கள் இயக்குனர்கள் சபையினரால் வழங்கப்பட்ட பௌதிக விஞ்ஞானத்திற்கான அதி சிறந்த இள ஆராய்ச்சியாளர் விருது, தேசிய விஞ்ஞான மன்றத்தால் வழங்கப்பட்ட இள விஞ்ஞானி விருது, மற்றும் தேசிய ஆராய்ச்சி பேரவை பல தடவைகள் வழங்கிய சிறந்த ஆராய்ச்சி வெளியீட்டுகளுக்கான ஜனாதிபதி விருதுகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவரின் ஆய்வுக் கட்டுரைகள் உலகம் முழுவதும் உள்ள விஞ்ஞானிகளால் அதிகளவு மேற்கோளிடப்பட்டு வருகின்றன.

சர்வதேசதரத்திலான இவரது ஆய்வுச் செயற்பாடுகளால் ஆசியாவின் தலைசிறந்த 100 விஞ்ஞானிகளில் ஒருவராக தெரிவாகியுள்ள சிரேஷ்ட பௌதிகவியல் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன் அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு மட்டுமல்லாது யாழ் மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

## காராத்தே போட்டியில் பிரகாசித்த ஸைனப்

(நூருல் ஹுதா உமர்)

சர்வதேச தற்காப்புக் கலை சங்க இலங்கை கிளையால் நடத்துப்பட்ட 3 ஆவது திறந்த சர்வதேச கராத்தே சம்பியன்ஷிப் 2025 24.05.2025 ஆம் திகதி இலங்கை தென்கிழக்கு கிழக்கு பல்கலைக்கழக பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த போட்டியில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் (புவியியல் துறை விசேட) மூன்றாம் ஆண்டு மாணவியான எம்.எஃப். ஸைனப், பங்கேற்று சீனியர் கட்டா பெண் நிலை முதலாம் பிரிவில் ஆவது இடத்தையும், சீனியர் குமிட் பெண் பிரிவில் 2 ஆவது இடத்தையும் பெற்றார்.






காலைக்கதிர் Kalaikkathir

# நியூஸிலாந்துடன் இணைந்து பணியாற்ற இலங்கை தயார்

## அயலுறவுத்துறை அமைச்சர் அறிவிப்பு

இலங்கைக்கும் நியூஸிலாந்துக்கும் இடையிலானநல்லுறவினைதுடிப்பானதும், பன்முகத்தன்மை வாய்ந்ததுமான கூட்டாண்மையாக மாற்றியமைப்பதை இலக்காகக்கொண்டு நியூஸிலாந்து அரசுடன் இணைந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதற்குத் தாம் தயாராக இருப்பதாக அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ பயணமாக நாட்டுக்கு வருகை தந்திருக்கும் நியூஸிலாந்தின் பிரதி பிரதமரும், அயலுறவுத்துறை அமைச்சருமானவின்ஸ்டன்பீற்றர்ஸ¬க்கும், இலங்கை அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்துக்கும் இடையிலான சந்திப்பை அடுத்து, நேற்று அயலுறவுத்துறை அமைச்சில் நடந்த பேச்சின் பின்னர் இருவரும் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த தாவது:

2021ஆம் ஆண்டு கொழும்பில் நியூஸிலாந்தின் வதிவிட இராஜதந்திர தூதரகம் நிறுவப்பட்டது. அதனைத் தொடர்ந்து இவ்வருடத்தொடக்கத்தில் வெலிங்டனில் இலங்கை உயர்ஸ்தானிகராலயம் திறக்கப்பட்டதன் பின்னர் இடம்பெற்றிருக்கும் இந்த உத்தியோகபூர்வ வருகையானது இலங்கையுடனான நியூஸிலாந்தின் வலுவான ஈடுபாட்டைக்காண்பிக்கின்றது. இது இருநாடுகளுக்கும் இடையில் வலுவடைந்துவரும் கூட்டாண்மையின் முக்கிய மைல்கல்லாகும்.



எமது இருநாடுகளுக்கும் இடையிலான நல்லுறவினை துடிப்பானதும், பன்முகத்தன்மை வாய்ந்ததுமான கூட்டாண் மையாக மாற்றியமைப்பதை இலக்காகக்கொண்டு நியூஸிலாந்து அரசுடன் இணைந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதற்குநாம்தயாராக இருக்கின்றோம்.

நியூஸிலாந்தின் அயலுறவுத்துறை அமைச்சருடனான எனது சந்திப்பின்போது குறிப்பாக வர்த்தகம், முதலீடு, விவசாயம், கல்வி, சுற்றுலா மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளில் இருதரப்பு நலன்களை மேம்படுத்துவது பற்றி விரிவாகக் கலந்துரையாடினோம். அத்தோடு நியூஸிலாந்துடனான வர்த்தக மற்றும் பொருளாதார கலந்துரையாடல் அமர்வொன்றை நிறுவுவது குறித்தும் இதன்போது ஆராய்ந்தோம். அதனூடாக இருநாடுகளுக்கும் இடையில் பல்துறைசார் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், இருநாடுகளினதும் வளர்ச்சி மற்றும் சுபீட்சத்தை மேம்படுத்தவும் முடியும் என நம்புகின்றோம்.

அதேபோன்று பால் உற்பத்திகள், பதப்படுத்தப்பட்ட உணவுகள் என்பன உள்ளடங்கலாக உயர் இயற்திறன்கொண்டதுறைகளில்வர்த்தகத்தொடர்புகளை விரிவுபடுத்துவது குறித்தும் நாம் கலந்துரையாடியதுடன், நியூஸிலாந்தில் இலங்கை உற்பத்திகளுக்கான சந்தை அணுகலை மேம்படுத்துவது பற்றியும் ஆராய்ந்தோம்.

அதேவேளை சுற்றுலாத்துறையைப் பொறுத்தமட்டில் ஆக்கபூர்வமானமுறையில்பிரயோகிக்கப்படாதஆற்றலை அடையாளங்கண்டு, அவற்றை ஊக்குவிப்பதுடன் கூட்டு முதலீடுகளை மேற்கொள்வதற்கும் நாம் இணங்கினோம்.

மேலும் இலங்கையின் இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் நியூஸிலாந்தின் ஊழல் எதிர்ப்பு முகவர் அமைப்புக்கள் ஆகியவற்றுக்கிடையே நேரடி ஒத்துழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பிலும் நாம் இதன்போது கலந்தாலோசித்தோம் எனத் தெரிவித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.05.2025இல் வெளியிடப்பெற்றது